பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 18 திங்கட்கிழமை (2-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily ஒளி: 247

## சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும்

# கைதிகள் உடல் நிலை; மிக மோசமாகப் பாதிப்பு!

## எனினும் நீர் அருந்துவதையும் நாளை தொடக்கம் நிறுத்துவர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2

தம்மை மீட்குமாறு அரசைக் கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் யுத்தக் கைதிகளில் பலரின் உடல்நிலை நேற்று மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருக்கிறது

பலரும் எழுந்து நடமாட முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர். அத்தோடு வயிற்றோட்டம், வாந்தி என்பவற்றால் அவதியுறுகின்றனர்.

எனினும் யுத்தக் கைதிகள் திட்டமிட்டவாறு நாளை முற்பகல் 11 மணியிலிருந்து நீர் அருந்துவதையும் நிறுத்திவிடுவர்.

யுத்தக் கைதிகள் இரண்டாவது முறையாக உண்ணாவிரதத்தை ஆரம்பித்து இன்றுடன் ஐந்தாவது நாளாகிறது.

நேற்று அவர்களில் பலரின் உடல்நிலை மோசமடைந்ததாக "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது.

யுத்தக் கைதிகள் நடமாட முடியாத நிலையில் இருப்பதாகவும், இருதய நோயால் பாதிக்கப்பட்ட எஸ். ஏ. விஜய பண்டார என்பவர் நேற்று மாலை மயக்கமுற்று விழுந்தார் எனவும் அறிவிக்கப்பட்டது.

தமது உண்ணாவிரதத்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'குமண' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், ஆக. 2

கொழும்பில் சிகிச்சை பெற்று திரும்பிய நோயாளர்களை திருகோணமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு நேற்று பருத்தித்துறைக்கு வந்த "குமண" கப்பல், கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக செல்லும் நோயாளரை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை 6.30 மணிக்கு திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

கொழும்பில் இருந்து நோயாளர்களும் அவர்களது உதவியாளர்களுமாக சுமார் 90 பேர் நேற்று குமணவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தபால்கள் தரம் பிரிப்பு இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 2

கொழும்பிலிருந்து ஆயிரத்து 283 பொதிகளில் வந்து சேர்ந்துள்ள தபால்களை தரம்பிரிக்கும் வேலைகள் யாழ். பிரதம தபாலகத்தில் நேற்ற ஆரம்பமாகின. நேற்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதிலும் விசேட ஏற்பாடாக ஊழியர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டு கடிதங்கள் தரம்பிரிக்கப்பட்டன.

இம்முறை வந்துள்ள தபால் பொதிகளில் பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டுக் கடிதங்களும், சஞ்சிகைகள், பத்திரிகைகள், பதிவுத் தபால்கள் என்பனவும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை வெளிநாட்டுக் கடிதங்கள் கிழிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் பதிவுக் கடிதங்களே உடைக்கப்பட்டிருக்கின்றன என்றும் யாழ். பிரதம தபால் அதிபர் தெரிவித்தார்.

தபால்கள் உரியவர்களுக்கு இன்று முதல் விநியோகிக்கப்படும். இவ்வாரம் முழுவதும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு:

# 5 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் புலிகள் வசம்!

### முன்னர் அரசு வெளியிட்ட தகவல் தவறாம்

கொழும்பு, ஆக. 2

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது புலிகளிடம் பறிகொடுத்த ஆயுதங்களின் தொகை மற்றும் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை ஆகியவை குறித்து உண்மையான தகவல்களை அரசு மறைத்துள்ளது என்றும் —

படையினருக்கு ஏற்பட்ட இழப்பு இராணுவம் கூறியிருப்பதை விட அதிகம் என்றும் —

"சண்டே ரைம்ஸ்" பத்திரிகை தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

இத்தாக்குதலில் தாங்கள் கைப்பற்றிய ஆயுதங்கள் தங்களின் ஓராண்டுத் தேவைக்கு போதுமானதாக இருக்கும் என போராளிகள் கூறியுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலின் போது பத்து லட்சம் டொலர் (இலங்கை நாணயப்படி ஐந்து கோடி ரூபா) பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகவும் —

இயந்திரத் துப்பாக்கிகள், நிலக்கண்ணிகள், வெடிமருந்துகள், தொடர்பு சாதனங்கள் உட்பட பல ஆயுத தளபாடங்களை புலிகள் தமதாக்கிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பு திருத்தம் பற்றி ஆராய

## தெரிவுக்குழு உறுப்பினர்கள் இவ்வாரத்தில் நியமனம்

உத்தேச அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்படவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறும் அங்கத்தவர்கள் பற்றிய விவரம் இவ்வாரத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு 18 எம். பிக்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். (உ-3)

## பதவியாவையும் விரைவில் புலிகள் தாக்குவார்கள்

### சிங்களவர் அச்சம்

மணலாறு மண்கிண்டிமலைப் பகுதியை விடுதலைப் புலிகளிடமிருந்து பாதுகாக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கத் தவறினால் விரைவில் பராக்கிரமபுர மற்றும் பதவியா பகுதிகளையும் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள்.

— இவ்வாறு அச்சம் தெரிவித்திருக்கிறார்கள் அப்பகுதியில் குடியேற்றப்பட்டிருக்கும் சிங்களவர்கள்.

மண்கிண்டிமலை முகாம் மீதான புலிகளின் தாக்குதலை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் நிக்கவெவ வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள் காமினி அத்துகோறளையும், ஜயரத்ன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்பு:

## உண்மை நிலையை அறிய ராணுவத் தளபதி உத்தரவு

கொழும்பு, ஆக. 2

விடுதலைப் புலிகள் நடத்திய மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த மற்றும் காணாமற் போன படையினரின் எண்ணிக்கையை உறுதிப்படுத்தும்படி இத் தாக்குதல் சம்பவம் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள விசாரணை நீதிமன்றத்தை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன கேட்டிருக்கிறார்.

இத்தாக்குதலின் போது ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்களுக்கு ஏற்பட்ட இழப்பை மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் இவ்விசாரணை நீதிமன்றம் கோரப்பட்டுள்ளது.

இவ்விசாரணை நீதிமன்றத்தின் தலைவராக இராணுவ பிரதம நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா பணிபுரிகின்றார்.

# வெலிக்கடை தமிழ்க் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

### கடந்த புதன் முதல் மீண்டும் போராட்டம்

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் கடந்த புதன்கிழமை முதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 14 ஆம் திகதி தமிழ் கைதிகள் இதே போன்ற உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து இருந்தனர்.

ஆயினும் அவர்களது கோரிக்கைகள் ஒரு மாத காலத்தில் நிறைவேற்றப்படும் என ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் வாக்குறுதி அளித்ததை அடுத்து உண்ணாவிரதம் அப்போது கைவிடப்பட்டது.

சுமார் ஐம்பது தமிழ் கைதிகளை விடுவிப்பதாகவும் அவ்வேளை உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவ்வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும்—

இதனால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான தமிழ் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று

ஸ்ரீபால கதிர்காம தேவஸ்தானத்தின் தீர்த்த உற்சவமும், பாராட்டு விழாவும் இன்று திங்கள் மாலை 5 30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள மேற்படி தேவஸ்தானத்தில் நடைபெறும்.

வேதாகம பேரறிஞர்கள் நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், மறைதிரு அன்னைதாசன் ஸ்கந்த சாம்ப சிவசிவாச்சாரியார் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட உள்ளனர். (த)

o o o

பிரம்மோபதேசம் பெற்ற அந்தணர்களுக்கான இருக்கு, வேத, யசுர்வேத, உபாகரும கிரியைகள் இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளன.

இந்து மதகுருமார் ஒன்றியத்தின் சார்பில் தென்மராட்சிக்கிளை அங்கத்தவர்களுக்கு மட்டுவில் நெல்லியடி விநாயகர் மண்டபத்தில் சிவஸ்ரீ இ. சோமசுந்தரக்குருக்கள் தலைமையிலும், —

வடமராட்சிக்கிளை அங்கத்தவர்களுக்கு பருத்தித்துறை சிவன்கோயில் பர்வதபத்தினி மண்டபத்தில் சிவஸ்ரீ. இராமநாதக்குருக்கள் தலைமையிலும் —

வலிகாமம் - தீவக அங்கத்தவர்களுக்கு யாழ் நீராவியடி கடைச்சாமி ஒழுங்கை நடேசப்பெருமான் ஆலய மண்டபத்தில் சிவஸ்ரீ. இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையிலும் கிரியைகள் இலவசமாக இந்துமத குருமார் ஒன்றியத்தினரால் நடத்தப்பட உள்ளன. (த-152)

o o o

இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்டம் பற்றிய கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும். (உ-173)

வடக்கு-கிழக்கில் உள்ள

# படை முகாம்களின் நிலைமை; ஜனாதிபதிக்கு ரணில் அறிக்கை

கொழும்பு, ஆக. 2

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இராணுவ மற்றும் கடற்படை முகாம்களுக்கு தாம் அண்மையில் மேற்கொண்ட உண்மை நிலையை அறியும் பயணம் சம்பந்தமான முழு அறிக்கை ஒன்றை ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு சமர்ப்பிக்கவிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

பலாலி மற்றும் காரைநகர் முகாம்களில் உள்ள படையினர் மத்தியில் பேசுகையில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

அரசாங்கம், நாடாளுமன்றம் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலும் பார்க்க அரசியல் ரீதியிலான தீர்வையே விரும்புகின்றன.

ஆனால் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் சாதகமான நிலையை ஏற்படுத்தவில்லை

ஆயுத போராட்டத்தைத் தவிர்ந்த ஏனைய வழிகளில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சமாதானம், சிவில்நிர்வாகம் மற்றும் சட்டம் - ஒழுங்கை ஏற்படுத்தக்கூடிய எந்த முயற்சியையும் எவரும் எதிர்க்க மாட்டார்கள்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தையில் — ஆயுதங்களைக் கைவிட்டு — பங்குபற்ற புலிகள் முன்வர வேண்டும். இதற்கான கதவு இன்னமும் திறந்தே உள்ளது — இவ்வாறு பிரதமர் கூறினார்.

## கிரிக்கெட் பார்க்கச் சென்ற 4 தமிழ் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஆக. 2

கொழும்பு எஸ். எஸ் ஸி. மைதானத்தில் நடைபெற்று வரும் இலங்கை — இந்திய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியை பார்க்கச் சென்றிருந்த நான்கு தமிழ் இளைஞர்கள் கடந்த வியாழனன்று பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெயர் விவரங்கள் தெரியவரவில்லை.

இலங்கை வந்துள்ள இந்திய கிரிக்கெட் அணியினர் தங்கும் இடங்கள் மற்றும் போட்டி நடைபெறும் மைதானத்தில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதற்கிடையில் —

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கொழும்பு கெத்தாராம விளையாட்டரங்குக்கு அருகில் வைத்து கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து நிரப்பப்படாத 5 ஆயிரம் தேசிய அடையாளக் கார்ட்களும், நிரப்பப்படாத 400 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் —

இவை கொழும்பில் உள்ள ஓர் அச்சகத்தில் அச்சிடப்பட்டன என்று தெரியவருவதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டது.

மூன்று சக்கர வாகனம் ஒன்றில் அவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைதான மூன்று இளைஞர்களும் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (இ-உ-எ-5)

## ஆலயங்களில்

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் கதிர்காம தீர்த்த உற்சவத்தை ஒட்டி இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் விசேட பூசையும் இடம் பெறும். (த)

o o o

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி அருள்மிகு ஆதி வைரவர் கோவில் சமுத்திரத் தீர்த்தம் இன்று காலை ஊறணி சமுத்திரத்தில் நடைபெறும். (உ-173)

o o o

மேலைப்புலோலி ஆலடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த தீர்த்தோற்சவம் இன்று நடைபெறும். (உ-173)

## நாளை

குருதேவர் சுவாமி சிவானந்த மகரிஷியினால் ஏற்படுத்தப்பட்ட மகாமந்திர அகண்டநாம கீர்த்தனையின் 50ஆண்டுகள்பூர்த்தியை ஒட்டி யாழ். நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வரை ஒவ்வொரு மாதமும் காலையில் இம்மகா மந்திரம் ஓதப்பட்டு வரும். (க)

## இலங்கை தோல்வி

கொழும்பு, ஆக. 2

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடந்த 2 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி 235 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. ஓட்ட விவரம் வருமாறு:

இந்தியா: 366 ஓட்டங்கள், 4விக்கெட் இழப்புக்கு 359 ஓட்டங்கள்.

இலங்கை: 254 ஓட்டங்கள், 236 ஓட்டங்கள். (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஆக. 2

காந்தியிரார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்கமாப்பாணர் மைதானத்தில்— 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில்—விலகல் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

3-30மணி:- யாழ் கிறீன் பீல் வி. க. எதிர் உரும்பராய் திருக்குமரன் வி. க.

4-30 மணி; — புத்தூர் எவரெஸ்ட் வி. க எதிர் மல்லாகம் ஆர். டி. எஸ். பி வி. க. (உ-20)

o o o

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3-30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ குருநகர் பாடும்மீன் 'பி' அணி எதிர் திவகம் தம்பாட்டி காந்திஜி அணி.

★ குருநகர் பாடும்மீன் 'ஏ' அணி எதிர் கோப்பாய் கோட் வீரார். (உ)

o o o

பருத்தித்துறை விக்னாபாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

## படகோட்டிகள் உரிமையாளர் கலந்துரையாடல்

கிளாலி — பூநகரிப் படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள், படகோட்டிகள் அனைவரையும் நாளை காலை 10 மணிக்கு அல்லிப்பளை படகுத் துறைக்கு - கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுவதற்காக —வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## மண்டைதீவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 2

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 1. 30 மணிக்கு யாழ்ப்பாணக் கரையோரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

இதேபோல நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கியும் —

நேற்று முன்தினமிரவு பலாலி இராணுவ முகாமில் இருந்து வளலாய், தொண்டைமானாறு பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-15)

## எம்.பிக்கள் தெரிவுக்கு புதிய முறை?

கொழும்பு, ஆக. 2

நாடாளுமன்றத்துக்கு அவர வாசி உறுப்பினர்கள் தேர்தல் தொகுதி அடிப்படையிலும் எஞ்சிய உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தெரிவு செய்ய வேண்டும் எனக் கோரும் அரசமைப்புத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வர விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது

இத்திருத்தம் தொடர்பான யோசனையை இது சம்பந்தமாக நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அரசு சமர்ப்பிக்கவிருக்கின்றது (த-எ)

## 50 கோடி ரூபா உபமானியம்

கொழும்பு, ஆக. 2

வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கென 50 கோடி ரூபாவை ஒதுக்கும் உபமானிய மதிப்பீடு ஒன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்து உள்ளது.

அமைச்சர் பி. தயாரத்னா தயாரித்த நான்கு வெவ்வேறு யோசனைகளின் கீழ் இந்நிதி வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக 10 கோடி ரூபாவும் —

சேதமாக்கப்பட்ட கட்டடங்களை புனரமைக்க 10 கோடி ரூபாவும்—

இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகளின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு மூன்றரைக் கோடியும்—

அகதிகளை மீளக்குடியமர்த்தும் பணிக்கு 30 கோடி ரூபாவும் இம்மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. (உ-எ)

## இணையப் பிரதிநிதிகளிடம் பெற்றோர் கோரிக்கை

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய உதவுமாறு அவர்களது பெற்றோர் கொழும்பு சென்றுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த வாரம் கொழும்பில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்ணாண்டோவை சந்தித்து இணையப் பிரதிநிதிகள் பேச்சுக்கள் நடத்தினர்

அங்கு சமூகமளித்திருந்த யுத்தக் கைதிகளின் 15 பெற்றோர் இணையப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

தமது பிள்ளைகளை விடுதலை செய்ய உதவுமாறு அவர்கள் இணையப் பிரதிநிதிகளிடம் கேட்டுள்ளனர்.


61 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



தோற்றம்: 24 — 11 — 1944

மறைவு: 03 — 06 — 1993

லண்டன் மாநகர் எஞ்ஜினியர்

அமரர் வைரமுத்து சிவகுருநாதன்

(B. Sc (Eng.); C.Eng.; M. I. C. E.; M. I. H. E.; - M. I. Arb., Dip. C. M.)

Civil Engineer London Borough of Ealing

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

லண்டன் மாநகரின் ஈலிங் சிரேஷ்ட பொறியியலாளராக உயர் பதவி பெற்று உலகத் தமிழ் மக்கள் அனைவர் உயர்வுக்கும், விடிவிற்கும் வழிவகுத்து துணை நின்ற எங்கள் குலதெய்வமான அமரர் சிவகுருநாதன் அவர்கள் 3 - 6 - 1993 அன்று ஐக்கிய சாம்ராஜ்யத்தில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் அமரத்துவம் குறித்த அந்தியேட்டிக் கிரியைகளைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இன்று (2 - 8 - 1993) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மாமன்மார், மாமிமார், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

கலைவாணி சனசமூக நிலையம் அருகாமை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (86781)



BECON
கல்வி நிறுவனம்
Stanley Road,
Jaffna.

94 - A/L
தூய/ பிரயோக கணிதம்
திரு. கிருஷ்ணா
செவ்வாய், வியாழன்
4. 00 — 6. 00
ஆரம்பம்:
05 — 08 — 1993
(இ-5607)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைப் பற்றிய தவறான கருத்தை மாற்றியது ஆனையிறவு யுத்தம்

## நினைவாலயத் திறப்பு விழாவில் புலிகள் பிரமுகர் உரை

யாழ்ப்பாணம், ஆக. 2

ஆனையிறவு முகாம் அன்று வீழ்ந்திருந்தால் எமது போராட்டப் பாதையே மாறி இருக்கும். எம்மை கெரில்லாக்கள் என்றும் பயங்கர வாதிகள் என்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டவர்களின் கருத்தை மாற்றியது இந்த யுத்தம். அப்போது ஏற்பட்ட இழப்புக்களை ஒரு பாடமாக வைத்து தற்பொழுது பல வெற்றிகளை பெற்றுள்ளோம். இதற்கெல்லாம் காரணம் அன்று வீரச்சாவெய்தியவர்களே.

நாம் யுத்தத்தை விரும்புபவர்கள் அல்லர். யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. இதுவரை 5 ஆயிரம் பேரை இழந்துள்ளோம். எனினும் ஆயிரம் பேரைக் கொடுத்து நாம் பல்லாயிரம் பேரைக் காப்பாற்றுவோம்.

இவ்வாறு வன்னி மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் மனோ குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் கொடிகாமத்தில் நடைபெற்ற நினைவாலயத் திறப்பு விழாவை தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக மாலை 5 மணியளவில் நினைவாலயத் திறப்பு விழா நடைபெற்றது முதலில் தென்மராட்சி சிறப்பு பொறுப்பாளர் குணா ஈகைச் சுடரை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து துணை இராணுவ தளபதி பால்ராஜ் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி சொர்ணம் நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைத்தார். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பொட்டம்மான் நினைவாலயத்தை திறந்து வைத்தார். நினைவாலயத்திற்குள் இருந்த ஈகைச் சுடரை சிறப்பு தளபதி செல்வி ஜெனா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நினைவாலயத்தில் 24 தொகுதிகளாக வைக்கப்பட்டிருக்கும் வீரச்சாவடைந்த போராளிகளின் திருவுருவப் படங்களுக்கும் விடுதலைப் புலிகளின் இராணுவ, கடற்புலி, அரசியல் நிதி, கலை - கலாசார, மகளிர் பிரிவு பொறுப்பாளர்கள் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து இறந்த மாவீரர்களின் குடும்பத்தினரும், உரித்துடையவர்களும் தமது மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர். அப்போது அவர்கள் அழுது கதறிய காட்சி நெஞ்சை உருக்கியது மேலும் சிலர் மயங்கி வீழ்ந்தனர். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவினர் இவர்களுக்கு ஆறுதல் கூறி முதலுதவிகளைச் செய்தனர்.

தொடர்ந்து இரவு 7-35 மணியளவில் நினைவு தினக் கூட்டம் ஆரம்பமாகியது. இக்கூட்டத்தில் வைத்து இந் நினைவாலயத்தை அமைக்க உதவிய ரவிக்கு யாழ். மாவட்ட தளபதி அன்பு பரிசு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய யாழ் மாவட்ட அரசியல் பிரிவு பொறுப்பாளர் இளம்பரிதி தமது உரையில் "இந்த ஆனையிறவு யுத்தம் உலகம் தமிழீழத்தை வியந்து பார்க்க வைத்த களம். இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உண்டு எனப் பேச வைத்த களம். உலக தொடர்பு சாதனங்கள் வரை குடா போருக்கு கொடுத்த முக்கியத்துவத்தையே எமது ஆனையிறவு போருக்கும் வழங்கின.

யாழ். மாவட்டங்களின் அமைப்புப் பொறுப்பாளர் தணிகைச் செல்வி தமது உரையில் கூறியதாவது; நாம் எதிரியை மறைந்திருந்து தாக்கிய காலம் மாறி இன்று எதிரியை தேடிச் சென்று தாக்குகிறோம். பயங்கரவாதிகள் என்று சொன்னவர்கள் இன்று ஒரே நாட்டில் இரு படைகள் என சொல்லக்கூடிய அளவிற்கு எமது போராட்டம் வளர்ந்துள்ளது.

இந்த போரில் மொத்தம் 602 போராளிகளை இழந்துள்ளோம். அவர்களில் 130 பேர் பெண் போராளிகள். 3 துணைப் படையினர் என்றார்.

மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கணேஷ் தனது உரையில்; களத்திற்கு சென்று போராட முடியாதவர்கள் வேறு வழிகளிலேனும் எமது போராட்டத்திற்கு உதவ வேண்டும். வெளிநாடு செல்வோரும் இம் மண் மீது பற்று வைக்க வேண்டும். அங்கு கற்றுக்கொண்டு வந்தவைகளை இங்கு பயன்படுத்த வேண்டும்" என்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பயிற்சி பணிப் பொறுப்பாளர் அரசண்ணா தனது உரையில் கூறியதாவது; ஸ்ரீலங்கா அரசை எதிர்த்து ஆனையிறவில் இவ்வளவு பெரிய விலையை நாம் கொடுத்திருந்தும் மீண்டும் மணலாறில் மேலும் விலை கொடுத்துள்ளோம். இன்னும் கொடுக்க தயாராக உள்ளோம். கடற் புலிகள் நெய்தல் நிலத்து மக்களுக்கே உதவுவார்கள் என்று பேசப்பட்டது. ஆனால் இன்று அவர்கள் கிளாலியில் உயிரிழக்கிறார்கள். தமிழர்களுக்கே படை இன்று உருவாகி விட்டது என்றார்.

மேலும் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி அருணா, மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், மணலாறு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பார்த்திபன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரும் உரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவ்விழாவில் விடுதலைப் போராளிகளும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

[த-117-9-162-5]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993—8—30 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

உதைபந்தாட்டம் /வலைகோல் பந்தாட்டம்/ கூடைப்பந்தாட்டம்/ மேசை வரிப்பந்தாட்டம்/ உடற்பயிற்சி விளையாட்டுக்கள்/மல்யுத்தப் பயிற்சிகள்/சதுரங்க ஆட்டம்/ கராட்டி/கிரிக்கெட்/வரிப்பந்தாட்டம் ஆகியனவற்றிற்கு இடைவரவுப் போதனாசிரியர்கள்.

கொடுப்பனவு விகிதம்:
மணித்தியாலத்திற்கு- 75/-ரூபா

(மாதமொன்றுக்கு - 900/- ரூபா உச்ச அளவுக்கு உட்பட)

மேற் குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில்பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், இதர விவரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர், பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெற்றுக் கொள்ளப்பட்ட 20/- ரூபா காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1993 07-27. (இ-5545)

---

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணி மண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் திரு. ஆர். ராதாகிருஷ்ணன், திரு. எஸ் கோபிதாஸ் ஆகியோரின் வயலின் சோலோ கச்சேரி மாலை 6 மணிமுதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீமுத்துவிநாயகர் கோயிலில் 5-15—6-15 'மகாசுரன் வதம்' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ. வை. நித்தியானந்தசர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் -

பி.ப. 2—3 மணிவரை 'பிரமதேவர் கருவ பங்கம்' என்னும் பொருளில் திரு. தி. பொன்னம்பலவாணர் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30 — 6-30 மணிவரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி 'தேவர்கள் கண்ணீர்' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பகல் 3-00 — 4-30 மணிவரை கந்தபுராண படனம்.

(க-111-126)

---

# சிறிசேன கூரே எந்நேரமும் இராஜினாமாச் செய்யலாம்

தற்போது வெளிநாடு சென்றுள்ள வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்ய இருப்பதாக 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவன் பி.பி.சி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் நடைபெற இருப்பதாகவும் அக் கூட்டத்தில் ஜனாதிபதி விஜேதுங்க புதிய பொதுச் செயலாளரைத் தெரிவுசெய்வதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் சிறிசேன கூரேயின் ராஜினாமா அடுத்த சில தினங்களில் இடம்பெறலாம் என்றும் விக்ரர் ஐவன் கூறியுள்ளார். (இ-6)

---

உ

நல்லூர்

## ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானம்

## தீர்த்த உற்சவமும் பாராட்டு விழாவும்

காலம்: 2-8-1993 திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு தீர்த்தம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பாராட்டுவிழாவும் நடைபெறும்.

★ பாராட்டு விழா ★

இரவு 8 மணிக்கு

தேவஸ்தானத்தார் பாராட்டி கௌரவிக்கும்

வேதாகம பேரறிஞர்கள்

| | |
|---|---|
| "நியாய சிரோமணி" | "மறைதிரு அன்னைதாசன்" |
| பிரம்மஸ்ரீ | சிகந்த |
| சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் | சாம்பசிவ சிவாச்சாரியார் |
| நல்லூர். | நாயன்மார்கட்டு |

★ நிகழ்ச்சி நிரல் ★

ஆரம்பவுரை:
சித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

தலைமையுரை:
மஹாராஜ ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள்
(மாவை ஆதீனம்)

ஆசியுரை:
பிரம்மஸ்ரீ இரா. சந்திரசேகரசர்மா
(போருட் பருத்தித்துறை)
கலாநிதி ப கோபாலகிருஷ்ணன்
(தலைவர் இந்துநாகரிகத் துறை)
திரு பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
திரு ஆ. மகாலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், நல்லூர்)

வாழ்த்துரை:
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
("தர்மசாஸ்தா குருகுலம்")
சிவத்தமிழ் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

பாராட்டுரை:
"முத்தமிழ் குருமணி"
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
(சுன்னாகம்)
"சிவாகம குருமணி"
சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள்
(கொக்குவில்)
திரு. சி. கனகரத்தினம்
(J.P.U.M. திவ்விய ஜீவன சங்கத்தலைவர் நல்லூர்)

தேவஸ்தானம் சார்பாக பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிந்து வாழ்த்தி கௌரவிப்போர்

"சிவாகம வள்ளல்"
சிவஸ்ரீ க. இராஜேந்திரக் குருக்கள் (நீர்வேலி)
சிவஸ்ரீ கு. குமாரக் குருக்கள்
(பாலகதிர்காம தேவஸ்தானம்)
திரு. பொ. தியாகராஜா
(சட்டநாதர் தேவஸ்தான தலைவர்)
திரு. இ. வாமதேவன்
(பண்டாரக்குளம் பிள்ளையார்கோயில் தர்மகர்த்தா)

பதில் உரை:

விழா நாயகர்கள்

தேவஸ்தானத்தால் நடத்தப்பெற்ற சமய அறிவுப் போட்டி பரிசில்கள் வழங்கல்
சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராஜா J.P.
(மில்க்வைற் தொழிலதிபர்)

தொண்டர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல்
திரு. க. பாக்கியராஜா
(வேளாதோப்பு-பாலசுப்பிரமணிய தேவஸ்தானம்)

### திருப்புகழ் தெய்வீகக் கான நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| பாட்டு | — சங்கீத பூஷணம் S. குமாரசாமி |
| வயலின் | — வித்துவான் R. S. கேசவமூர்த்தி |
| மிருதங்கம் | — கலா வித்தகர் K. கண்ணதாசன் |
| கடம் | — வித்துவான் சதா. வேல்மாறன் |
| தபேலா | — செல்வன் க. மயூரன் |

### வயலின் சோலோ

செல்வி சுகன்யா சிவானந்தம்
செல்வன் சிவானந்தம் அகிலன்
செல்வி சங்கீதா சிவகுருநாதன்
செல்வி ஜெனனி சிவஞானசுந்தரம்

| | |
|---|---|
| மிருதங்கம் | — செல்வன் சபாநாயகன் ஹரிதரன் |
| தபேலா | — செல்வன் கணேசசுந்தரம் மயூரன் |

இங்ஙனம்:
தேவஸ்தானம்.

(26758)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### அச்சுக்கோப்பாளர் தேவை

5 வருட அனுபவமுள்ள பக்கம் கட்டுபவர், பைன்டர், அச்சுக் கோப்பாளர் (பெண்) உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஏ. எஸ். ஜே. பிரின்டிங் வேக்ஸ், மல்லாகம். [26737]

### தேவை

½ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி. த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-5535)

### விற்பனைக்கு

முட்டை இடும் தாராக்கள், பாமாஸ் கோழிக்குஞ்சுகள் (ஒரு மாதத்திற்கு மேற்பட்டவை) இடைக்குமிடம்: கந்தசாமி அன் சன்ஸ் இல. 16, ஆடியபாதம் வீதி, நல்லூர். (26773)

### ஆண்டு - 5 புலமைப்பரிசில்

கணிதம், தமிழ், மாதிரி வினாத்தாள்கள்-35 கொண்ட அரிய பயிற்சி நூல் (அச்சேற்றப்பட்டது) விற்பனையாகின்றது; இந் நூல் ஒன்றே திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிப்பது. வெளியீடு: கு. வி அச்சகம் புத்தக விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6394)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். தினமும் காலை 8-30 — 12-30, பி.ப. 3-00 — 6-00. த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (26704)

### மிருதங்கம்

மிருதங்கம் முழுவேலைகளும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (26762)

### வாங்கப்படும்

நன்றாகக் காய்ந்த எலுமிச்சம்கோது (பூஞ்சணம் பிடிக்காதது) கிலோ 50/-ரூபாவுக்கு வாங்கப்படும். கந்தசாமி அன் சன்ஸ், இல. 15, ஆடியபாதம் வீதி நல்லூர். (26774)

### சீயாக்காய் பவுடர்

காவேரி சீயாக்காய்ப் பவுடர். நல்லூர் கோயிலடியில் விற்பனையாகும் இடம்: அபிராமி பல்பொருள் அங்காடி. (நல்லூர் சிவன் கோயில் முன்பாக), ப. நோ. கூ. சங்கம், கிளை இல. 12, நல்லூர் மத்தி. (26772)

## ஏழாலையில் ஷெல் வீச்சு தொடர்கிறது

ஏழாலை, ஆக. 2

ஏழாலை மேற்கில் உள்ள குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வெள்ளிக்கிழமை அதிகாலை இரு ஷெல்கள் ஏவப்பட்டன.

இதனால் தென்னை மரம் ஒன்றும், இருபதுக்கும் மேற்பட்ட வாழை மரங்களும் சேதம் அடைந்தன. வீடுகளுக்கும் சிறு சேதங்கள் ஏற்பட்டன. (இ-45)

---

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

## ★ 94 - A/L ★

துரித மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்

**செவ்வாய்**

3-00 — 5-00 தாவரவியல் — திரு. குணசீலன்
5-00 — 6-00 பௌதிகவியல் — திரு. கணேசன்

**வியாழன்**

3-00 — 5-00 இரசாயனவியல் — திரு. மணியம்
5-00 — 6-00 பௌதிகவியல் — திரு. கணேசன்

**ஆரம்பம்: 3 — 8 — 1993**

செவ்வாய் 3-00 மணி

(சி-5631)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முதலாம் வருட மாணவர்களுக்கான

## மகாபொல கொடுப்பனவு

### 3ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவு யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

முதலாம் வருடம்

| | |
|---|---|
| கலைப்பிரிவு<br>வர்த்தகப்பிரிவு | 05-08-93 9.00—12-00<br>09-08-93 9-00—12-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு<br>மருத்துவ பிரிவு | 06-08-93 9-00 —12-00<br>10-08-93 9-00—12-00 |

- பதிவாளர்.

(சி-5541)

---

## 13ஆவது ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 14 — 11 — 1935

மறைவு: 02 — 08 — 1980

### அமரர் சு. யோசவ் அன்ரன்

(பொலிஸ் சார்ஜன்)

கடமை! கண்ணியம்!! கட்டுப்பாடு!!!
என்று வாழ்ந்தீர்கள்
சான்றோர் மனம் மகிழ பெருமகனாய்
திகழ்ந்தீர்கள்
உடன் பிறந்தோர் உயர்வுக்காய்
உழைத்தீர்கள்
இன்றெம்மை நீர் பிரிந்து ஆண்டு
பதின்மூன்றாயினும் - என்றும்
எம்மோடிருந்து எமைக்காத்து
வழிநடத்துகிறீர்
இணையில்லாத் தந்தையே!
வணங்குகிறோம் உம்மையே.

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரன் சு. அலெக்ஸ்,
சகோதரிகள் ஜெ. விற்றுலா,
சை. எலிசபேத், கு. பற்றீசியா.

141/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (26764)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 09 — 1936

மறைவு: 06 — 08 — 1990

### அமரர் சுப்பிரமணியம் தர்மபாலன்

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம்)

திதி: 02 — 08 — 1993

ஆண்டுகள் மூன்று அகன்றாலும் - உங்கள்
அன்பு எமைவிட்டு அகலாது - உமது
ஆசியும் அறிவுரைகளும் இன்றும்
வழி நடத்திக் கொண்டிருக்கின்றன.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமகன்.

இல. 4, செட்டித் தெரு,
நல்லூர். (26770)

---

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



படைப்பு: 28 — 05 — 1938

அழிப்பு: 24 — 07 — 1983

அமரர்

### கந்தசாமி மயில்வாகனம்

(மக்கள் வங்கி ஊழியர்)

திதி: 02 - 08 - 1993


கடமை காக்கச் சென்ற
கண்ணிய மனிதரை
காலன் நடு வழியில்
கவர்ந்து சென்றதேனோ
காலங்கள் பத்தாண்டு கடந்தாலும்
கலையுமா உங்கள் நினைவு.

நினைவுகளுடன்!
குடும்பத்தினர், உறவினர்கள்.

"தணிகை"
நெல்லியான் வீதி,
சுழிபுரம் மேற்கு. (26765)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 06 — 1914

மறைவு: 13 — 08 — 1992

### கதிரித்தம்பி சிவசம்பு

(இளைப்பாறிய ஆசிரியர், அருணோதயாக் கல்லூரி- அளவெட்டி)

திதி: 2 — 8 — 1993

அன்புடனும், பாசத்துடனும் வழி நடத்தி, எமக்கு நல்வாழ்வு தந்த அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திட்டியோலை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (6385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிறிமாவோவின் ஆக்ரோஷப்!

அரசாங்கம் தனது சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி விட்டு, விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்கு முழு நாட்டை யும் யுத்தத்துக்குத் தயாராக்க வேண்டும்.

இவ்வாறு ஆக்ரோஷத்துடன் அறைகூவல் விடுத்திருக்கிறார் ஸ்ரீலங்காவின் முன்னாள் பிர தமரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவியுமாகிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா

இந்தக் கிழட்டு வயதில் அவர் இவ்வாறு அனல் கக்கு வதற்கு உள்ளார்ந்த நோக்கம் ஒன்று உண்டு

[illegible]யது இன்னும் ஒரு வருடத்தில் புதிய அரசாங்கத் தையும், ஜனாதிபதியையும் ஆட்சிபீடத்தில் ஏற்றுவதற்கான தேர்தல்கள் நடக்கவுள்ளன. பதினேழு வருடங்களுக்கு அந்த அதிகாரபீடத்தை நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு சிறிமாவோவின் கட்சி தலை சாய்ந்து போய் தரையில் வீழ்ந்து கிடக்கிறது.

அந்த நிலையை மாற்றி, அடுத்த வருடத் தேர்தலில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசி யக் கட்சியுடன் போட்டி போடும் அளவுக்கு இப்போதே தனது கட்சியை நிமிர்த்த வேண்டும் என்று தள்ளாத வயதிலும் கிழவியாருக்கு ஓர் ஆசை!

அந்த ஆசையை செய லாக்கிப் பயன்பெறுவதற்கு தமிழர்களை — புலிகளை — சம் பந்தப்படுத்தி ஒரு கோஷத்தை முன்வைப்பதே சிறந்த மார்க் கம் என்று அவர் தமது அனு பவத்தைக் கொண்டு கணக்கிட் டிருக்கிறார்! அவ்வளவு தான்!

தெற்கில் வாக்கு வங்கியைப் பெருக்குவதற்கு தமிழர் விரோ தப் போக்கை, பேரின வாதத்தை விட வேறு எதுவுமே பயன்படாது (வேலை செய் யாது) என்பது சிங்கள அர சியல்வாதிகளின் நடைமுறை அகராதியில் உள்ள முக்கிய வரைவிலக்கணமாகிவிட்டது.

மூன்று மாதங்களுக்கு முன் னர் நடந்த மாகாணசபைத் தேர்தலில் சிறிமாவோ அணிக்கு 37 வீத வாக்குகள் மட்டுமே கிடைத்தன. அந்த நிலையை நிவர்த்தி செய்வதற் குச் சிங்களவரின் மதியை மயக்கக் கூடிய, வெறியூட்ட வல்ல தமிழர் விரோத மதுபானம் ஒன்று தேவை. எனவே இந்தக் கோஷத்தை சிறிமாவோ திடீர் (Instant) தயாரிப்பாக்கி விட்டார்!

மேலும், சிங்களவர்களின் ஆதரவை இழந்து மண் கவ் விக் கிடக்கும் அவரது கட்சிக் குள் நீண்ட காலமாக உட்கட்சி பூசல் என்ற புற்றுநோய் பீடித்திருக்கிறது. அதன் உச் சக்கட்டம் அனுராவை கட்சியில் இருந்து இடைநிறுத்தியதோடு மெத்தவும் முற்றிப் போயுள் ளது.

கட்சி உடைந்து போகும் அல் லது அழிந்து போகும் இப் போதைய ஆபத்திலிருந்து தப்புவதற்கு இந்தக் கோஷம் பெரிதும் உதவலாம் என்றும் கிழவியார் நாடி பிடித்துப் பார்த்திருக்கிறார்! புலிகள் மண்கிண்டிமலை வெற்றி நல்ல சந்தர்ப்பத்தை வழங்கிவிட்டது!

மண்கிண்டிமலை அதிரடி சிங்களப் படைகளுக்கு மட்டு மன்றி இராணுவத் தீர்வையே நாடி நிற்கும் சகல சிங்களத் தலைவர்களுக்கும் பேரடிதான்! அதனால் சிறிமாவோ ஆத்திர மடைவது தவிர்க்க முடியா ததே! அதற்காக சிறிலங்கா முழுவதையும் யுத்தத்துக்குத் தயார் செய்து தமிழரைப் பொசுக்க வேண்டும் என்று எண்ணுவது அவர் சிங்களத் தலைவியே என்பதை நிரூபிக் கிறது! உண்மையும் அதுவே!

இதன் திரட்டிய முடிவு என்ன? சிங்களவரிடம் கேட்டோ, பேசியோ தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற முடியாது. அடித்துத்தான் அமைதாக்கிக் கொள்ள வேண் டும் என்பதேயாம்!

# தமிழர்களுக்கு எதிரான போருக்கு எமது பணம் செலவிடப்படுவதா?

## இந்நிலை மாற வேண்டும் என்கிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஆக. 2

''தமிழர்களின் பணம் சிங்க ளப் பகுதிகளின் உற்பத்தி அபிவிருத்திகளுக்கும் தமிழ ருக்கு எதிரான போருக்கும் பயன்படும் நிலை மாற வேண் டும்''

யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள் வங்கி யாழ் நவீன சந்தைக் கிளையைத் திறந்து வைத்துப் பேசிய யாழ் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இவ்வாறு கூறினார்.

நவீன சந்தைக் கிளையின் முகாமையாளர் திரு. ஆ. சிற் சபேசன் தலைமையில் அண் மையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் துணைவேந் தர் தொடர்ந்து உரையாற்று கையில் கூறியதாவது:-

இங்கேயுள்ள பணத்தை த வங்கிகள் இந்தப் பகுதியின் அபிவிருத்திகளுக்காக கடன் உதவிகளின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டும். வங்கியின் கடமை பிர தேச மக்களுக்கு ஆதாரமாக செயற்படுவதே.

இந்த வங்கியூடாக மாண வர்கள் பயன்பெறும் நிலை உருவாக வேண்டும் என்று கூறினார்.

மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தம் பேசும்போது

யாழ் பகுதியில் அபிவிருத் திக்கென ஐம்பது லட்சம்ரூபா முதலீட்டு உதவியாக வழங்கப் படவுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்கும், வங்கி துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என்று கூறினார்.

கலைப்பீடாதிபதி பேரா சிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ் வரன், மேலதிக உதவி அர சாங்க அதிபர் திருமதி பத் தினியம்மா திலகநாயகம் போல் உதவி முகாமையாளர் திரு. க. துரைசிங்கம் ஆகியோ ரும் பேசினார்கள்.

முன்னதாக பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பிரதேச முகாமையாளர் திரு. அரு ளானந்தம் ஆகியோர் மங்கல விளக்கேற்றினார்கள். பேரா சிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைத்தார்.

(க-111)

### 120 ஈழத்தமிழர்கள்

## செங்கல்பட்டு சிறைக்கு இடமாற்றப்பட்டனர்!

சென்னை, ஆக. 2

தமிழகத்தில் பல்வேறு சிறைகளில் பலவித குற்றங் களுக்காகச் சிறை வைக்கப் பட்டுள்ள 120 இலங்கைத் தமிழர் செங்கல்பட்டுத் துணை சிறைச்சாலைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்ட னர்.

முறையான பாஸ்போர்ட் மற்றும் வீசா இல்லாத கார ணத்துக்காகவும் அரசு விதித்த காலக் கெடுவினுள் தங்கள் பெயர்களை அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்யத் தவறிய கார ணத்துக்காகவும் கைது செய் யப்பட்ட இலங்கைத் தமிழர் கள் பலர் காஞ்சிபுரம், வேலூர், திருச்சானூர், சங்க கிரி, பேளூர் ஆகிய இடங் களில் உள்ள சிறைகளில் வைக்கப்பட்டிருந்தனர். இவர் களே செங்கல்பட்டு துணைச் சிறைச்சாலைக்கு இடமாற் றஞ் செய்யப்பட்டனர்.

## பொருண்மிய கழகத்தின் உள்ளூர் உற்பத்தி கண்காட்சி

### தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு தமிழீழ பொருண் மிய மேம்பாட்டுக் கழகம் உள்ளூர் உற்பத்திப் பொருள் களின் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகிறது.

இக் கண்காட்சியில் தமது உள்ளூர் உற்பத்திப் பொருள் களை வைக்க விரும்பும் நிறு வனங்களோ அல்லது தனிப் பட்டவர்களோ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படு கின்றனர்.

உள்ளூர் உற்பத்திப் பொருள் களில் மக்கள் மத்தியில் நம் பிக்கை உணர்வை வளர்க்கும் நோக்குடனேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இக் கண்காட்சியை நடத்தி வருகிறது. (இ)

## செய்திக் கொத்து

### பெருங்குளம் புனரமைப்பு

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளத்தில் நீர்ப்பற்றாக் குறையை நீக்க அங்குள்ள பொது மக்கள் ஒன்று சேர்ந்து குளத்தைப் புனரமைத்துள் ளனர். [க-75]

### அகதிமுகாமில் பொக்குளிப்பான்

அரியாலை டயஸ் வீடமைப் புத் திட்ட அகதிமுகாமில் பொக்குளிப்பான் நோய் பரவி வருவதாகவும் ஏற்கனவே 13 பேர் பாதிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

(க-17)

### வர்த்தகர் சங்கம் பணம் வழங்கியது

மிருசுவில் கெற்பலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் தையல் பயிற்சி நிலையத்துக்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங் கம் ஒரு தொகை பணத்தை வழங்கியுள்ளது. (க-117)

### அரச அதிபர் வாக்குறுதி

தென்மராட்சி, ஆக. 2

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தென்மராட்சி பிரதேச செய லர் திரு. பு சுந்தரம்பிள்ளை யுடன் அண்மையில் கைதடி முதியோர் இல்லத்துக்கு விஜ யம் செய்தபோது ஆட்டோ வாகனம் ஒன்று, நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று, மூங்கில் தட்டிகள் ஆகியவற்றை இல் லத்துக்குப் பெற்றுத் தருவ தாக வாக்குறுதி அளித்தார்.

(க-117)

### வைத்தியசாலைக்கு ஜெனரேற்றர்

தென்மராட்சி, ஆக. 2

கைதடி ஆயுர்வேத வைத் தியசாலைக்கு ஜெனரேற்றர் ஒன்றும் நீரிறைக்கும் இயந்தி ரம் ஒன்றும் கடந்த ஜூலை 27 ஆம் திகதி யாழ். அர சாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களால் வழங்கப்பட்டது.

### கழக விழா

இடம்பெயர்ந்த திவக மக் கள் நலன் காக்கும் கழகத்தில் தையல் பயிற்சி பெற்ற மக் களுக்கான சான்றிதழ் வழங் கும வைபவமும் மரண, மகப் பேற்றுக் கொடுப்பனவுக்கான நிதிப்பத்திர வெளியீட்டு விழாவும் அண்மையில் கழக மண்டபத்தில் கழகத் தலை வர் வ. ஐயாத்துரை தலை மையில் நடைபெற்றது.

[க-17]

**வனமுண்டானால் = நம்நாடு வளமாகிடுமே!**

### வாதுவ வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஆக. 2

உணவு மற்றும் தனியாருக் கான ஏராளமவு பொருள் களுடன் 'வாதுவ' கப்பல் கடந்த சனி காலை பருத்தித் துறையை வந்தடைந்தது.

அரிசி, சீனி, பாமா, பருப்பு என்பன உட்பட உண வும் பொருள்களும் மற்றும் உரவகைகள், மாட்டுத்தீன், சைக்கிள் டயர் டியூப், நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பனவும் வாதுவவில் எடுத்துவரப்பட்டுள்ளன.

(த - 5 -173)

### கொழும்பில் ஆடிவேல் விழா

கொழும்பு, ஆக. 2

கொழும்பில் வருடாந்த ஆடிவேல் விழா நேற்று முன் தினம் ஆரம்பமாகியது

புறக்கோட்டை சம்மாங் கோடு கதிரேசர் கோவிலில் இருந்து தங்கரதம் காலை பம் பலப்பிட்டி மாணிக்க விநா யகர் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டது.

தங்கரதம் இன்று மீண்டும் புறக்கோட்டை நோக்கிப் புறப்படும். (அ)

### மன்னாரில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 2

மன்னாரில் முள்விக்குளம் கடற்கரைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8மணி யளவில் 'புக்காரா' விமானங் கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

(இ-5)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு மேலும் ஒரு தொகுதி மருந்து வகை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கென மேலும் ஒரு தொகுதி மருந்து வகைகளை சுகாதார மகளிர் விவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

இம் மருந்து வகைகள் திரு கோணமலை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்ப தாக சுகாதார மகளிர் விவ கார அமைச்சு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத் திற்கு அறிவித்துள்ளது.

சென்ற வாரம் பருத்தித் துறைத் துறைமுகம் வந்த டைந்த ''குமண'' கப்பலில் மூன்று மாதங்களுக்குரிய மருந்துவகைகள் யாழ். போதனா வைத்தியசாலைக் கென அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. (த-17)

### பென்ஷன் வவுச்சர்கள்

யாழ் மாவட்ட ஓய்வூதியர் களின் ஆகஸ்ட் மாதத்துக் கான பென்சன் வவுச்சர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளன. நேற்று முன்தினம் பருத்தித் துறையை வந்தடைந்த 'வாதுவ' கப்பலில் அவை எடுத்து வரப்பட்டுள்ளன.

## விடுதிகளில் தங்கியிருந்த 27 தமிழர்கள் கைது!

கொழும்பு 'ஐலண்ட்' விடுதி யில் தங்கியிருந்த 27 தமிழ் மக்களை பொலீஸார் கடந்த 23ஆம் திகதி கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அனோ அசனியோ விடுதியில் அதே தினத்தில் 3 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்விரு விடுதிகளில் கைது செய்யப்பட்ட 27 தமிழ் இளைஞர்களில் ஒருவர் மட் டுமே விடுதலையானார்.

## அம்பாறை ராணுவ முகாமில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து

யாழ்ப்பாணம், ஆக. 2

அம்பாறை மாவட்டத்தில் இங்கினிபாகலை வீதியில் பௌத்த விகாரைக்கு அருகில் அமைந்துள்ள இராணுவ முகா மில் கடந்த திங்களன்று திடீர் தீ விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் விடுதி ஒன்றும் மற்றும் உடமைகளும் எரிந்து நாசமாகின. இந்த தீ விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

(த - 5)

உ

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## இன்னருள் ஈந்திடுவாய்

பல்லவி

நல்ல கதி நமக்குத் தந்தருள்வாயையா
நாளுமே படுந்துயரைப் போக்கிடுவாயையா

அனுபல்லவி

தொல்லையே தரும் பகைமைப் பேயினை ஓட்டியே
இல்லையே யென்னாது இன்னரு ளீந்திடுவாய்
(நல்ல)

சரணம்

நல்லைப் பதிதனிலே நாளுமே இனிதமர்ந்தாய்
வல்லவடிவேல் கொண்டு அசுரர்தனை அழித்தாய்
கல்லை நிகர்த்தமனம் கரைந்திடக் கருணைசெய்வாய்
தில்லைச் சிவன்மைந்தனே தேவாதி தேவனே!

— எஸ். ஆர். திருஞானசம்பந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ராவுக்கு எதிராக கட்சிக்குள் போர்க் கொடி!

மணிலா, ஆக 2

இந்தியாவில் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பிரதமர் ராவ் வெற்றியடைந்திருந்தாலும் கட்சிக்குள் அவரின் நிலை பலவீனம் அடைந்திருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர்கள் பிரதமர் ராவை மாற்றிவிட்டு வேறு ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க மறைமுக ஆதரவு திரட்டும் முயற்சியை ஆரம்பித்திருக்கிறார்கள்.

கட்சிக்குள் ராவுக்கு எதிராக இருந்து வரும் மனித வள அமைச்சர் அஜித் சிங்கை (வயது 62) பிரதமராக்க முயற்சிகள் நடந்து வருவதாக கூறப்படுகிறது.

முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சிப் பிரமுகருமான சந்திரசேகர் புதிய தலைவரை தேர்ந்தெடுக்குமாறு காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ராவ் பதவியில் தொடர்ந்து நீடிப்பதா என்பது குறித்து கட்சி ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்று பத்திரிகைகளும் கோரி வருகின்றன.

எதிர்க் கட்சிகளினால் நரசிம்மராவ் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கடந்த புதன்கிழமை பதினான்கு வாக்குகளினால் தோல்வி அடைந்தது.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 251பேர் வாக்களித்தனர். எதிராக 265 பேர் வாக்களித்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பில் நரசிம்மராவ் அரசு கவிழ்ந்துவிடும் என்றே பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கடைசி நேரத்தில் சில எம். பிக்கள் தமது கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறாக செயற்பட்டனர். அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்ததால் நரசிம்மராவ் அரசு தப்பிப்பிழைத்தது.

வி. பி. சிங்கின் ஜனதா தள் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற 'ஜனதா தள் ஏ'— அதாவது அஜித்சிங் பிரிவைச் சேர்ந்த இருபது எம்பிக்களில் ஏழு எம். பிக்களும்—

பீகார்மாநிலத்தைச் சேர்ந்த பிராந்தியக் கட்சி ஒன்றைச் சேர்ந்த நான்கு எம்பிக்களும் தமது கட்சி முடிவுகளுக்கு மாறாக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

கடைசி நேரத்தில் சில எம். பிக்கள் குத்துக்கரணம் அடித்து நரசிம்மராவ் அரசை தோல்வியிலிருந்து காப்பாற்றிய போதிலும் நரசிம்மராவ் அரசின் எஞ்சிய மூன்று வருட பதவிக் காலம் கேள்விக்குரியதாகவே இருக்கப் போகிறது.

## திருக்கோயிலில் தாக்குதல் மூவர் காயம்

கொழும்பு, ஆக. 2

கிழக்கு மாகாணம், திருக்கோயில் பகுதியில் அண்மையில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காட்டில் காணப்பட்ட ஒரு சடலத்தை எடுக்க ஜீப் ஒன்றில் அதிரடிப் படையினர் சென்ற போதே இத்தாக்குதலுக்கு இலக்காகினர்.

படுகாயமடைந்த அதிரடிப் படைக் கான்ஸ்டபிள் ஒருவர் பதுளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். ஏனையவர்கள் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி சரஸ்வதி

அம்பன் கொட்டோடையைச் சேர்ந்த இளையதம்பி சரஸ்வதி 1993-8-1 காலை காலமாகிவிட்டார்.

அன்னார் கொட்டோடை இளையதம்பி இலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், நவரத்தினம் (வட்டக்கச்சி), சிவப்சுபிரமணியம் (மதுவரி இலாகா, சாவகச்சேரி), சதாசிவம் (ஆசிரியர்), சந்திரலிங்கம், காலஞ்சென்ற ஜெயக்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணிதேவி, குணரஞ்சிதம், ராதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவதர்சன், விஜிதரன், மயூரா, சிவதரன், நிசாந், பிரசாந், தீபிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு கதிரவேல், திருமதி கதிராமூ ஆகியோரின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று 1-8-93 ஞாயிற்றுக்கிழமை கரும்பின்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. சதாசிவம்.
(சகோதரன்)

அம்பன்
குடத்தனை. (26782)

### நாகலிங்கம் பேரின்பநாதன்

புங்குடுதீவு இறுபிட்டி 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் பேரின்பநாதன் மொஸ்கோவில் 23-07-1993 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மு. நாகலிங்கம் - காலஞ்சென்ற செல்லமுத்து நாகலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், பத்மநாதன் (ஜேர்மனி), பூலோகநாதன் (பொட்ஸ்வானா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லமுத்து, சுப்பிரமணியம் மற்றும் இராமநாதி கண்மணிப்பிள்ளை, சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற தியாகராஜா, நவசிவாயம் இராமாசிப்பிள்ளை மற்றும் தம்பிப்பிள்ளை - பர்வதம் தம்பதிகள் ஆகியோரின் பெறாமகனும், பத்மநாதன் - குகராஜவதி, பூலோகநாதன் - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயந்தி, ஜெயகௌரி, மகிந்தன், சஞ்சீவன், கிரிசாந்தி, கீர்த்தன் கிருஸ்நாத் ஆகியோரின் பாசமுள்ள சிறியதந்தையும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியை மொஸ்கோவில் 25-07-1993 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம். அவரின் மரணச் செய்தி கேட்டு வருகை தந்து எமது துக்கத்தில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்,
மு. நாகலிங்கம்
(தந்தை)

18/4-1, அம்மன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம், [26784]

### செல்லர் தியாகராசா J.P.

(மரியநேசன்)

ஆத்திசூடி வீதியை பிறப்பிடமாகக் கொண்ட செல்லர் தியாகராசா 01-08-1993 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் — அன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், ஞானம்மாவின் (ரதி) அன்புக் கணவரும், வத்சலா, சிறீதரன், முரளீதரன், குமணதரன், பகீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணாளன், குலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், இராசப்பு, சின்னப்பு (ரதி இரும்புத் தொழிற்சாலை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆத்திசூடி வீதி இல்லத்தில் இருந்து இன்று (02-08-93) முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்,

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

56/9, ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம். [26783]

### கதிரவேலு இரத்தினம்

ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கதிரவேலு இரத்தினம் அவர்கள் நேற்று காலமாகிவிட்டார்

அன்னார் கதிரவேலு தம்பதிகளின் ஏக புத்திரனும், கனகம்மாவின் அன்புக் கணவனும், சிவஞானம், சாம்பசிவம், சரஸ்வதி, சந்தானலட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுப்பிரமணியம், தம்பிராசா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், மதிவதனி (சுவிஸ்), பத்மாவதி, பிரேம்குமார், சுரேஸ்குமார், இராஜ்குமார், இராஜினி, றஞ்சனா, கலா, நிரஞ்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02-08-93 பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
சி. க. தம்பிராசா
(மருமகன்)

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (26787)

## கைதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குப் பயன்தரக்கூடிய, சாதகமான செய்தி எதுவும் வருமா என்ற ஆர்வத்தில் அவர்கள் வானொலியைக் கேட்பதிலும், சிங்களப் பத்திரிகைகளைப் படிப்பதிலும் ஈடுபடுகின்றனர்.

தம்மை விடுவிப்பதற்கு அரசின் பொறுப்பு வாய்ந்தவர்கள் மனிதாபிமானத்துடன் முன்வரவேண்டும். என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்

நாளை முதல் தண்ணீரும் அருந்தாமல் உண்ணாவிரதத்தைத் தொடர இருப்பதால், எமது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கு மனிதாபிமான முறையில் அரசு முன்வர வேண்டும் —

எமது பிள்ளைகளை இந்நிலையில் விட்டுவிட்டு நாம் கொழும்பு சென்று எதனையும் சாதித்து விட முடியாது. ஆகையால் நாம் இங்கேயே தங்கி இருக்கப் போகிறோம்.— என்று யுத்தக் கைதிகளின் உறவினர்களில் ஒருவரான திருமதி சோமாவதி "புலிகளின் குரலு"க்குத் தெரிவித்திருக்கிறார். (அ-3)

## 'குமண'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இங்கிருந்து நோயாளரும், கொழும்பில் தமது உறவினர்களுடன் சேர்ந்துகொள்வதற்காக செல்பவர்களுமாக சுமார் 80 பேர் நேற்று குமணவில் பயணமாகினர். (உ-15)

## தபால்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து விநியோகம் இடம்பெறும்.

இம்முறை பெரும் எண்ணிக்கையான கடிதங்கள் வந்திருப்பதால் அவற்றைத் தரம் பிரித்து முடிக்க அனேகமாக ஒரு வாரம் செல்லும்.

தரம்பிரிக்கப்படும் கடிதங்களை ஒழுங்கு முறையில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் மக்கள் தபாலகத்துக்கு வந்து சிரமம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதம தபால் அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். தபால்கள் இயன்றவரை விரைவில் விலாசதாரருக்கு விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல லட்சம் ரூபா பெறுமதியான முத்திரை வகைகளும், காகிதாதிகளும் இம்முறை இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-5)

## பதவியாவையும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் கடந்த வாரம் ஹெலிக்கொப்டர் மூலம் மண்கிண்டி மலைக்குச் சென்றனர்.

நிக்கவெவ வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள சிங்கள மக்களை அமைச்சர்கள் இருவரும் சந்தித்துப் பேசினர். அப்போதே அவர் [illegible] தெரிவித்தனர். (உ-எ-3)

# ஜி.சீ.ஈ. (உ.த.) பரீட்சை இன்று ஆரம்பமாகிறது

## குடாநாட்டில் 9,000 பரீட்சார்த்திகள்

யாழ்ப்பாணம், ஆக 2

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. குடாநாட்டில் 67 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு 9 ஆயிரத்துக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக யாழ். கல்வி அலுவலக பரீட்சைப் பகுதி உயர் அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

பரீட்சைக்கான பிராந்திய இணைப்பு நிலையம் யாழ். சென். ஜோன் பொஸ்கோ பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. (உ-5)

## 5 கோடி ரூபா பெறுமதியான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதாகவும் "சண்டே ரைம்ஸ்" தெரிவித்தது.

மண்கிண்டிமலைத் தாக்குதல் இராணுவத்துக்கு ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவாகும்.

"கடந்த வருடம் வெற்றிலைக்கேணியில் கைப்பற்றிய அளவு ஆயுதங்களை மண்கிண்டிமலையிலும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

"தமிழர்கள் வாழும் இந்தப் பகுதியில் தமிழர்கள் அல்லாதோரை அரசு குடியமர்த்த தீர்மானித்ததை அடுத்தே அப்பகுதி தாக்குதல் பிரதேசமாக மாறியிருக்கிறது.

"இராணுவத் தளபதிகளும் அமைச்சர்களும் இந்தப் பகுதிகளுக்குச் சென்று மக்களுக்குத் தைரியம் ஊட்டினாலும்—

"இந்தப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட மக்கள் அங்கு வசிப்பதற்கு அஞ்சுகிறார்கள்."

—இப்படி "சண்டே ரைம்ஸ்" மேலும் தெரிவித்தது.

மண்கிண்டிமலை முகாம் மீது புலிகள் பெரும் எடுப்பில் நடத்திய தாக்குதல் தெற்கில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## இசைக் கலைஞர்கள் தேவை

தமிழீழத்தின் பிரபல இசைக்குழு ஒன்றுடன் இணைந்து பணியாற்ற தபேலா, கொங்கோடிரம்ஸ், ரம்ஸ் ஆகிய வாத்தியக் கருவிகள் இசைக்கத் தெரிந்தவர்களும், அறிவிப்புத் துறையில் அனுபவமுள்ளவர்களும் தேவை.

தகுதியானவர்கள் பெயர் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

இல: 550
C/o உதயன். (26771)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலுள்ள அச்சகத்தில் 2-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org